# ஆராதனை

ஆராதனை என்பது வணக்கம், பூசனை என்னும் பொருள் தரும். நாம் இறைவனை வீட்டிலும் ஆலயங்களிலும் ஆராதிக்கிறோம். நாம் இறைவனை ஆராதிக்கும்போது எமக்கு மட்டுமன்றிப் பிறருக்கும் எல்லா நன்மைகளும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தல் வேண்டும்.

ஆலயம் என்பது ஆன்மா லயிக்கும் இடம் என்பர். ஆலயத்தில் மனத்தை ஒருநிலைப்படுத்தி இறைவனை வழிபாடு செய்ய முடியும். ஆலயத்தில் அர்ச்சகர் இறைவனுக்குத் தூபதீபம் காட்டி மலர்களால் அருச்சனை செய்வார். அவ்வேளை நாம் திருமுறைகளைப் பாடி வழிபாடு செய்வோம். வழிபாட்டில் தீபாராதனை சிறப்பிடம் பெறுகிறது. தீப + ஆராதனை தீபாராதனை எனப்படுகிறது. இதன் பொருள் தீபத்தால் இறைவனை வழிபடுதல் என்பதாகும்.

தீபாராதனை இடம்பெறும் போது அடியார்கள் இறைவனது திருக்கோலத்தை நன்கு தரிசிப்பர். தீப தரிசனத்தால் உள்ளம் தூய்மை அடைகிறது. தீபங்கள் மூன்று முறை ஓங்கார வடிவில் காட்டப்படும். முதலில் உலக நன்மைக்காகவும் இரண்டாவதாக நாட்டு நன்மைக்காகவும் மூன்றாவதாக எல்லா உயிர்களினதும் நன்மைக்காகவும் தீபங்கள் காட்டப் படுகின்றன என்று சிவாகமங்கள் கூறுகின்றன.



ஒற்றைத்தீபம், அடுக்குத்தீபம், நாகதீபம், அன்னதீபம், இடபதீபம், கும்பதீபம், கர்ப்பூரதீபம், வில்வதீபம், பஞ்சாராத்தி எனப் பலவித தீபங்கள் உள்ளன. தீபாராதனை நடக்கும்போது மங்கல வாத்தியங்கள் ஒலிக்கும்.



ஆலயப் பூசை ஆராதனைகளில் மணியோசை முக்கிய இடம் பெறுகிறது. கண்டாமணியோசையுடனேயே ஆலயத்தில் பூசைகள் ஆரம்பிக்கின்றன. இதனால் இதனை ஆயத்தமணி என்றும் கூறுவர். இவ்வோசை கேட்டவுடன் அடியார்கள் ஆலயத்தை நோக்கிச் செல்வர்.

பூசகர் பஞ்சாராத்தி காட்டும்போது கோத்துமணி ஒலிக்கும். அவ்வோசையுடன் இணைந்ததாகப் பூசகரின் கையிலிருக்கும் கைமணியும் ஒலிக்கும். இவ்வொலிகள் அடியார்களின் மனத்தில் ஊடுருவி அவர்களை மெய்ம்மறக்கச் செய்யும்; பக்திப் பரவசமடையச் செய்யும்.



மேலும் ஆலயத்தின் வாசற்கதவில் சின்னஞ்சிறிய மணிகள் பொருத்தப் பட்டிருக்கும். மணிக்கதவில் தொங்கும் மணிகள் கதவைத் திறக்கும் போதும் மூடும்போதும் நெடுநேரம் ஒலித்துக் கொண்டே இருக்கும். இதனால் அடியார்கள் மனதில் இனிமையும் பக்தியுணர்வும் பரவும்.



மங்கல வாத்தியங்களாவன மேளம், நாதஸ்வரம், பேரிகை, மத்தளம், தாளம் என்பன ஆகும். மங்கல வாத்தியங்கள் ஒலிப்பதால் ஆலயத்தில் பக்திச் சூழ்நிலை நிலவும்.

வழிபாட்டில் திருமுறை ஓதுதல் ஓர் அங்கமாக விளங்குகிறது. கூட்டு வழிபாட்டில் பஜனை, கூட்டுப் பிரார்த்தனை என்பன இடம் பெறுகின்றன. வழிபாட்டினால் இறைவனின் மீதான பக்தி வளருகின்றது.

சமயவாழ்வு செழுமை அடைவதற்கும், தூய்மை பெறுவதற்கும் வழிபாடு அடிப்படையாக உள்ளது. சைவ மக்களின் ஆன்ம ஈடேற்றத்தில் வழிபாடுகள் முக்கிய இடம் பெறுகின்றன.

**"தெய்விக ஒளியில் ஆணவம் அகலும்"**

## பயிற்சி

சுருக்கமான விடை எழுதுங்கள்.

1) "ஆராதனை" என்பதன் பொருள் யாது?
2) ஆன்மா லயிக்கும் இடம் எது?
3) தீபம் மூன்று முறை காட்டப்படுவதன் நோக்கம் யாது?
4) தீப வகைகளைக் கூறுக.
5) ஆலயத்தில் உள்ள மணிவகைகள் எவை?
6) ஆலயத்தில் பக்திச் சூழலை வளர்க்கும் மங்கல வாத்தியங்கள் எவை?

## செயற்பாடு

- வெள்ளிக்கிழமைகளில் ஆலயத்திற்குச் சென்று பூசையிற் கலந்து கொண்ட பின்னர் தோத்திரப் பாடல்களைப் பாடுதலிலும், கூட்டுப் பிரார்த்தனையிலும் ஈடுபடுங்கள்.